## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோவிலில் 'நாட்டியாஞ்சலி' விழாவினை இன்று (17.2.2018) தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

அருள்மிகு நடராஜ பெருமானின் பக்தராக இருந்து மனதிருப்தியுடன் நாட்டியாஞ்சலி விழாவினை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைவதாக ஆளுநர் தெரிவித்தார்.

மகா சிவாராத்திரியின்போது பல்வேறு வகையான அளப்பறிய நடனங்களை பக்தர்கள் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும்போது சிவபெருமான் அவற்றை காண்பதையே 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது. தொன்மையான இந்திய நாட்டியத்தினை உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இங்கேவந்திருந்து ஒன்றுசேர்ந்து செய்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

சிவபெருமான் இங்கு நடராஜராக காட்சிதருகிறார் என்றும், பஞ்ச பூதங்களான ஆகாயம், நெருப்பு, வாயு, நீர், நிலம் ஆகியவற்றில் ஆகாயத்திற்கான ஸ்தலமாக சிதம்பரம் விளங்குகிறது என்றும் தெரிவித்தார்.

சிதம்பரம் நடராஜர் கோவில் 10 ஆம் நூற்றாண்டில் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டு 1000 ஆண்டுகள் கடந்து விளங்குகிறது என்றும், அறிவியல் பூர்வமாக மனிதஉடலமைப்பை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டது என்றும்

தெரிவித்தார். மனிதனின் ஒரு நாள் சுவாச எண்ணிக்கைக்கு இணையாக இங்குள்ள கோபுரத்தில் 21600 தங்க ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளதென்றும், உடலிலுள்ள ஒன்பது வாசல்களுக்கு இணையாக ஒன்பது கலசங்களை கொண்டுள்ளதென்றும், இங்குள்ள கனகசபை, சுவாச மண்டலம், நரம்பு மண்டலம் மற்றும் பிற உறுப்புகளுக்கு ஒப்பாக விளங்குகிறது என்றும், அளப்பரிய நாட்டியம் உயிர் உடம்பிலுள்ள இதயத் துடிப்பிற்கு சமமானது என்றும், இங்குள்ள கோவில் உலகம் அனைத்திற்குமாக விளங்குகிறது என்றும் தெரிவித்தார்.

நடராஜரை, சபேசன்–சபையில் ஆடும் ஈசன் என்று பொருள்கொள்ளலாம் என்றும், சிதம்பரம் கோவிலில் நாட்டியத்திற்காக மைய மேடை அமைக்கப்பட்டு 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சி நடத்துவது பொருத்தமானது என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

பரதநாட்டியம் குறித்து நாட்டிய சாஸ்திரத்திலும், சிலப்பதிகாரத்திலும் விளக்கங்கள் உள்ளதென்றும், பழம்பெரும் கதைகள் சொல்வதற்கு நாட்டியம் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளதென்றும் தெரிவித்தார்.

பழமையான குச்சுப்புடி நடனம் 17 ஆம் நூற்றாண்டில் மாற்றியமைக்கப்பட்டதென்று தெரிவித்தார். கதகளி நடனம் கேரளாவில் நாடகங்களில் பயன்படுத்தப்படுகிறது என்றும் தெரிவித்தார். கதக், ஒடிசி, மணிப்புரி ஆகிய நடனங்களும் வரலாற்றுத் தொன்மை கொண்டவை என்றும் தெரிவித்தார்.

அனைத்து நடனங்களும் ஆன்மிக கருத்துகளையும், கதைகளையும் மக்களிடம் தெரியப்படுத்த பயன்படுத்தப்பட்டதென்றும் தெரிவித்தார்.

நடராஜர் பெருமானே அனைத்து நடனங்களுக்கும் குருவானவர் என்றும், உலகத்தை அவர்தான் மையப்படுத்துகிறார் என்றும் தெரிவித்தார்.

மக்களை சிந்திக்கச் செய்யக்கூடிய மிகப் பெரிய சக்தி இந்தியக் கலாச்சாரத்திற்கு உண்டு என்றும், உலகிற்கே ஒளி விளக்காக திகழும் சிந்தனைவாதிகளையும், தத்துவ ஞானிகளையும், ஆன்மிக தலைவர்களையும் இந்தியா கொண்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

உலகின் ஒவ்வொரு பகுதியில் உள்ள மக்களும் ஒவ்வொரு சிறப்பான செயல்களில் பெயர் பெற்றிருப்பார்கள். அந்த வரிசையில் இந்தியர்கள் ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் என்றும், ஆன்மிகம் மற்றவர்கள் கருத்தையும் ஏற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெரிவித்தார்.

நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி இந்திய கலாச்சாரத்தை மேலும் மெருகேற்றும் என்றும் தெரிவித்தார்.

நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியினை ஒவ்வொரு வருடமும் தவறாது நடத்திவரும் நிர்வாகிகளுக்கு பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தார்.